**செய்தி வெளியீடு எண்: 177** **நாள்: 04.03.2020**

**<u>இன்று (4.3.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் சேலம் மாவட்டம், எடப்பாடி, இருப்பாளி ஊராட்சியில் நடைபெற்ற மேட்டூர் அணையின் வெள்ள உபரி நீரை சரபங்கா வடிநிலத்தில் உள்ள 100 வறண்ட ஏரிகளுக்கு நீரேற்று மூலம் நீர் வழங்கும் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை:</u>**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே பங்கேற்றுச் சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற அனைவருக்கும் முதற்கண் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சி. நான் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபொழுதும், 2011–ல் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய அமைச்சரவையில் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக பணியாற்றிய காலத்திலும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கு பெற்றிருக்கின்றேன். ஆனால், எந்த நிகழ்ச்சியிலும் கிடைக்கப் பெறாத மகிழ்ச்சி எனக்கு இந்த நிகழ்ச்சியில் கிடைத்திருக்கிறது.

இந்தப் பகுதியானது வானம் பார்த்த பூமியாக இருக்கின்ற பகுதி. எனக்குத் தெரிந்தவரை இங்குள்ள 100 ஏரிகளும் இதுவரை வறண்டுதான் இருந்திருக்கின்றன. இதுபோன்ற வறண்ட ஏரிகளில் பருவ காலங்களில் பொழிகின்ற மழை நீரை நிரப்ப வேண்டுமென்பதற்காக சுமார் 565 கோடி ரூபாயில் இந்தத் திட்டம் இன்றையதினம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் இன்னும் 11 மாதங்களில் நிறைவேற்றப்பட்டு, மேட்டுப்பட்டி ஏரி நிரம்பி, இந்தப் பகுதியில் வேளாண் பணிகள் சிறக்கும், குடிநீர்ப் பிரச்சினை முழுவதும் தீர்க்கப்படும். சொன்னதைச் செய்கின்ற ஒரே அரசு இதயதெய்வம்

புரட்சிதலைவி அம்மாவினுடைய அரசு. திட்டத்தை அறிவித்துவிட்டு மக்களை ஏமாற்றுகிற அரசு எங்கள் அரசல்ல. 2011–ல் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றதிலிருந்தும், அவர் மறைவிற்குப் பிறகும் அவர் கண்ட கனவை எங்களுடைய அரசு தொடர்ந்து நனவாக்கிக் கொண்டிருக்கிறது. அம்மா அவர்கள் தொடங்கிய திட்டங்கள் அனைத்தையும் சிந்தாமல், சிதறாமல் மக்களிடம் சேர்த்துக் கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல, அம்மா அவர்களால் அறிவிக்கப்படாத, அம்மா அவர்கள் மனதில் இடம்பெற்ற திட்டங்களையும், அம்மா கண்ட கனவையும் எங்கள் அரசு இன்றைய தினம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

கிராமங்களில் வாழ்கின்ற ஏழை மக்களின் வாழ்வு செழிக்க வேண்டுமென்றால், கிராமப் பொருளாதாரத்தை மேம்பாடு அடையச் செய்ய வேண்டுமென்றால், அதற்கு நீர் ஆதாரத்தைப் பெருக்க வேண்டுமென்றும், அதற்கு நீர் மேலாண்மைத் திட்டத்தை நாம் முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் எங்களிடம் சொல்வார்கள். துரதிருஷ்டவசமாக அம்மா மறைந்து விட்டார்கள். அம்மா மனதில் துளிர்த்த எண்ணங்கள் எங்களுடைய அரசால் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டு வருகிறது.

ஒன்றே முக்கால் ஆண்டுகளுக்கு முன்பு, கடலில் வீணாகக் கலக்கின்ற மழைநீரை சேமிப்பதற்காக திட்டம் வகுப்பதற்கு, அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றக்கூடிய திறமைமிக்க 2 தலைமைப் பொறியாளர்கள், 3 கண்காணிப்புப் பொறியாளர்கள் என 5 ஓய்வு பெற்றப் பொறியாளர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமிக்க நான் ஆணையிட்டேன். அக்குழுவினருடன் பலமுறை ஆலோசனைகள் நடத்தப்பட்டு, அதனடிப்படையில் ரூபாய் 565 கோடியில் வறண்ட 100 ஏரிகளுக்கு தண்ணீர் நிரப்புகின்ற திட்டம் வகுக்கப்பட்டு,

தலைமைப் பொறியாளர்கள் மூலமாக இன்றைக்கு செயல்படுத்தியிருக்கின்றோம். ஒரு திட்டம் தீட்டுகின்றபொழுது, அதனை குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றவேண்டும். திட்டம் தீட்டுவது எளிது, அதை நடைமுறைப்படுத்துவது கடினம். திட்டத்தை குறிப்பிட்ட காலத்தில் முடிக்க வேண்டுமென்பதற்காக நீர் மேலாண்மைத் திட்டத்தை உருவாக்கி, இத்திட்டம் மிகச் சிறப்பாக இன்றைக்கு தமிழகத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று சொன்னால், இது எங்களுடைய அரசு எடுத்த நடவடிக்கை என்பதை இந்த நேரத்தில் ஆணித்தரமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் பொறுப்பேற்றவுடன், மாண்புமிகு அம்மாவின் அரசு, குடிமராமத்துத் திட்டத்தின் மூலம் முதற்கட்டமாக ரூபாய் 100 கோடி நிதி ஒதுக்கி, பரீட்சார்த்த முறையில் 1,519 ஏரிகள் தேர்வு செய்யப்பட்டு, அதில் 1,513 ஏரிகளில் பணிகள் நிறைவு பெற்றன. இது ஒரு சிறப்பான திட்டமாக மக்கள், விவசாயிகளிடத்தில் வரவேற்பைப் பெற்ற காரணத்தினால், விவசாயிகள் இத்திட்டத்தை முழுமையாக விரிவுபடுத்த வேண்டுமென்று என்னிடம் கோரிக்கை வைத்தார்கள். தமிழகத்தில் இருக்கின்ற சுமார் 40 ஆயிரம் ஏரிகளில் 14 ஆயிரம் பொதுப்பணித் துறையின் மூலமாக பராமரிக்கப்படுகிறது, மீதமுள்ள 26 ஆயிரம் ஏரிகள் ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக பராமரிக்கப்படுகின்றன. ஏரிகள், குட்டைகள், ஊரணிகள் என்று பிரித்து பல்வேறு நீர்நிலைகள் இருக்கின்றன. தமிழகத்தில் இருக்கின்ற சுமார் 40 ஆயிரம் ஏரிகளும் படிப்படியாக தூர்வாரப்பட்டு, கரைகள் பலப்படுத்தப்பட்டு, மதகுகள் சீரமைக்கப்பட்டு, வரப்பு வாய்க்காலை சரிசெய்து, உபரிநீரைச் சேமிக்க, இரண்டாவது முறையாக ரூபாய் 329 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, 29 மாவட்டங்களில் இத்திட்டத்தை நாங்கள் செயல்படுத்தி வருகிறோம். இந்தத் திட்டத்தில் 1,511 ஏரிகள் தேர்வு

செய்யப்பட்டு 1439 பணிகள் நிறைவு பெற்றிருக்கின்றன. 2019–2020–ல் மேலும், மாவட்டங்களில் உள்ள பிற ஏரிகள் தேர்வு செய்யப்பட்டு, சுமார் 500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, 1,829 ஏரிகள் தேர்வு செய்யப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டு, 949 பணிகள் முடிவுற்றன, எஞ்சிய பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தக் குடிமராமத்துத் திட்டம், முழுக்க, முழுக்க விவசாயிகள் பங்களிப்புடன் நிறைவேற்றப்படுகிறது. ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் திரு.ஸ்டாலின் அவர்கள் வேண்டுமென்றே, திட்டமிட்டு, குடிமராமத்துத் திட்டத்திலே முறைகேடு நடைபெற்றதாக ஒரு தவறான செய்தியை, பொய்யான செய்தியை மக்களிடத்திலே பரப்பி வருகிறார், அதை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம்.

இந்தக் குடிமராமத்துத் திட்டத்தை முழுக்க முழுக்க விவசாயிகளிடத்திலே ஒப்படைக்கிறோம், விவசாயிகள் தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிறார்கள். குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாக ஏரிகள் ஆழப்படுத்தப்படுவதோடு, ஏரிகளில் அள்ளப்படுகின்ற வண்டல் மண் அந்த விவசாயிகளின் நிலத்திற்கு இயற்கை உரமாக பயன்படுகிறது. இது அற்புதமான திட்டம். திரு.ஸ்டாலின் அவர்களே, தயவு கூர்ந்து, தெரிந்தால் பேசுங்கள், விவசாயிகளை தயவு செய்து குறை கூறாதீர்கள். இந்தத் திட்டம் விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் வரவேற்புடன் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. குடிமராமத்துத் திட்டத்தின் மூலம் ஏரிகள் தூர்வாரப்பட்டதன் விளைவாக, ஏரிகள் நிறைந்து, கோடை காலங்களில் நிலத்தடி நீர் உயர்ந்து வேளாண் பெருமக்களுக்குத் தேவையான நீரும், குடிப்பதற்குத் தேவையான நீரும் கிடைக்கிறது.

இந்த அற்புதமான திட்டத்தைக் கொண்டு வந்த அரசு எங்களுடைய அரசு என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீர் ஓடை மற்றும் நதியின் வழியாக வீணாக கடலில் கலக்கிறது. எனவே தடுப்பணைகள் மூலம், அந்த மழைநீர் முழுவதையும் சேமித்து வைத்து, நிலத்தடி நீர் உயர்த்தப்பட வேண்டுமென்று அதிகாரிகளோடு கலந்தாலோசித்து முடிவெடுத்து, மூன்றாண்டு கால திட்டமாக அதனை நாங்கள் அறிவித்தோம். அதன் அடிப்படையில் ரூ.1,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது, தற்பொழுது ரூ.650 கோடி மதிப்பிலான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எங்கெங்கெல்லாம் ஓடையின் வழியாக, நதியின் வழியாக நீர் செல்கின்றதோ, அங்கெல்லாம் தடுப்பணைகள் கட்டப்படுகிறது. ஆதனூர் குமாரமங்கலத்தில் சுமார் ரூ.400 கோடி செலவில், தடுப்பணை கட்டப்படுகிறது, அதில் 30 சதவீதப் பணிகள் நிறைவடைந்துள்ளன. காவேரி உபரிநீர் கடலிலே கலப்பதை தடுப்பதற்காக, ஆங்காங்கே கதவணைகள் கட்டுதல், பெய்கின்ற மழைநீர் ஒரு சொட்டு கூட வீணாகாமல் பாதுகாப்பதற்காக தடுப்பணைகள் அமைத்தல் போன்ற திட்டங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றுகின்ற அரசு எங்களுடைய அரசு.

இன்றைக்கு தமிழகத்திலே சுமார் 60 சதவீதம் பேர் வேளாண் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான நீரை எப்படி வழங்க வேண்டும் என்பதை திட்டமிட்டு, இன்றைய தினம் முதல் கட்டமாக, பரிட்சார்த்த முறையிலே, சேலம் மாவட்டத்தில், 565 கோடி ரூபாய் செலவில் 100 வறண்ட ஏரிகளை நிரப்புவதற்கான சேலம் மாவட்டம், எடப்பாடி சட்டமன்றத் தொகுதி, இருப்பாளி ஊராட்சி, மேட்டுப்பட்டி ஏரியில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. தமிழகத்திலுள்ள வறட்சியான பகுதிகளை

செழிப்பாக்குவதற்கான திட்டம் தான் இந்தத் திட்டமாகும். விவசாயிகள் செழிப்போடு வாழ வேண்டும், விவசாயத் தொழிலாளிக்கு நிரந்தர வேலைவாய்ப்பு பெற்றுத் தரவேண்டும் என்பதுதான் எங்கள் லட்சியம், அந்த லட்சியத்தை நிறைவேற்றுவதுதான் எங்களுடைய முதல் பணி என்ற நோக்கத்தில் இன்றைய தினம் இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

மேட்டூர் அணை, அதன் முழு கொள்ளளவான 120 அடியை எட்டுகின்றபொழுது, திறந்து விடப்படும் உபரி நீர் கடலில் வீணாக கலக்கிறது. அந்த உபரிநீரை எடுத்து 100 ஏரிகளிலும் நிரப்பப்படுகிறது. எங்கே தண்ணீர் எடுக்கப்படுகிறது, எங்கே மின் மோட்டார் மூலமாக தண்ணீரை சேமித்து அதிலிருந்து எப்படி மின் மோட்டார் மூலமாக மற்ற ஏரிகளுக்கு நிரப்பப்படுகின்றது என்பதை தெளிவாகச் சொன்னோம். நாங்கள் செய்கின்ற திட்டங்களை முழுமையாக நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். எதிர்க்கட்சியினர் எல்லாம் வாய்ச்சொல் வீரர்கள், நாங்கள் அப்படியல்ல, செயல் வீரர்கள், செயலிலே நாங்கள் காட்டிக் கொண்டிருக்கின்றோம். 11 மாதங்கள் கழித்துப் பார்க்கின்றபொழுது, முதலமைச்சர் இருப்பாளியிலே பேசினார், அதற்கு இன்றைக்கு செயல்வடிவம் கொடுத்திருக்கின்றார், நாங்கள் கண்ட காட்சி கனவல்ல, அது நனவாக்கப்பட்டிருக்கின்றது என்ற செய்தி உங்கள் மனதில் இடம்பெற வேண்டும். நான் இந்த அறிவிப்பை வெளியிட்டவுடன், நமது பொதுப்பணித் துறையைச் சார்ந்த தலைமைப் பொறியாளர்கள் உட்பட அனைத்து பொறியாளர்களும் ஒருங்கிணைந்து, இரவு, பகல் பாராமல் வெகு சிறப்பாக செயல்பட்டது பாராட்டுக்குரியது. அதேபோல், நீர் மேலாண்மைத் திட்டத்திற்கு அமைக்கப்பட்ட பொறியாளர்கள் இணைந்து செயல்பட்டு, இந்த 100 ஏரிகளில் நீரை நிரப்புவதற்கான ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு, விவசாயிகளின் எண்ணங்களை பிரதிபலிப்பதற்காக,

வடிவமைத்துக் கொடுத்த பணி இன்றைக்கு துவங்கப்பட்டிருக்கிறது. அதற்காக உங்கள் சார்பாகவும், தமிழ்நாடு முதலமைச்சர் என்ற முறையிலும், இந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலும் பொதுப்பணித் துறை பொறியாளர்களுக்கு மனமார, உளமாற, நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல் இத்திட்டத்தை நிறைவேற்ற நிலம் கையகப்படுத்தும் பணிகளுக்கு துணை நின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், வருவாய்த் துறை அதிகாரிகளுக்கும் மக்களின் சார்பாக, வேளாண் பெருமக்கள் சார்பாக, எனது சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எவ்வளவு திட்டங்கள் போட்டாலும், அந்தத் திட்டத்தை குறிப்பிட்ட காலத்திலே நிறைவேற்றக் கூடிய பணி அதிகாரிகளிடத்திலே தான் இருக்கிறது. எனவே, நான் பொறுப்பேற்றதிலிருந்து இன்றுவரை ஐ.ஏ.எஸ் அதிகாரி முதல் அனைத்துத் துறை அதிகாரிகளும் சிறப்பான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், எனவே தான், அரசு போடுகின்ற திட்டங்கள் குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற்றப்படுகின்றது என்பதை நான் மனமார உளமாற சொல்லிக்கொள்கிறேன். அதனால் தான், எதிர்க்கட்சிக்காரர்கள், எதுவும் பேசமுடியாமல் இன்றைக்கு தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு வண்டிக்கு இரண்டு சக்கரம் என்று சொன்னால், ஒன்று நாம் நடத்தும் அரசு, மற்றொன்று அதிகாரிகள். இரண்டு சக்கரமும் சரியாக இருந்தால் தான் இலக்கினை அடைய முடியும். இப்பொழுது இரண்டு சக்கரமும் சரியாக இருக்கின்றது, இலக்கை நோக்கி தமிழகம் சென்று கொண்டிருக்கின்றது. எனவே, தான் துறைகள் வாரியாக பல்வேறு விருதுகளை நாம் பெற்றுக் கொண்டிருக்கின்றோம். இன்றைக்கு, இந்தியாவிலேயே அதிகமாக தேசிய விருதுகளை பெற்ற முதல் மாநிலம் தமிழ்நாடு. தமிழகத்தில் என்ன நடைபெற்றது என்று சில எதிர்க்கட்சித் தலைவர்கள் சொல்கிறார்கள். இவ்வளவும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற

காரணத்தினால் தான், துறைகள் வாரியாக சிறப்பான திட்டங்களை நடைமுறைப்படுத்தி மக்கள் பயன்பெற்றதன் விளைவாக, இந்தியாவில் தமிழ்நாடு முதன்மையான மாநிலமாக விளங்குகின்ற காரணத்தினால் தான் மத்திய அரசு பல்வேறு விருதுகளை வழங்கிக் கொண்டிருக்கிறது.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த தலைவர்களெல்லாம் வேண்டுமென்றே திட்டமிட்டு, அரசின் மீது தவறான குற்றச்சாட்டுகளை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு குற்றச்சாட்டுகள் சொன்னாலும் அதைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை. எங்கள் மடியிலே கனமில்லை, அதனால் வழியிலே பயமில்லை, எங்களுடைய மனம் திடமாக இருக்கின்றது, எடுக்கின்ற முடிவும் திடமானது. அந்தத் திடமான எண்ணத்தின் அடிப்படையில், நிறைய திட்டங்களை நாங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். மக்கள் தான் எங்களுக்கு எஜமானர்கள், மக்கள் என்ன எண்ணுகின்றார்களோ அந்த எண்ணத்தை நிறைவேற்றுவதுதான் எங்களுடைய லட்சியம், அந்த லட்சியப் பயணத்திலே நாங்கள் தொடர்ந்து வெற்றி பெறுவோம் என்பதை தெரிவிக்க விரும்புகிறேன்.

விவசாய பெருமக்களின் நலன் கருதி மேட்டூர் அணையின் உபரி நீரை சேலம் மாவட்டத்தில் சரபங்கா வடிநிலத்தில் உள்ள வறண்ட ஏரிகளுக்கு நீரேற்று மூலம் நீர் வழங்கும் திட்டப் பணிக்கு, இருப்பாளி ஊராட்சியில் நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன். மேட்டூர் அணையின் வெள்ள உபரி நீரை சேலம் மாவட்டத்தில் சரபங்கா வடிநிலத்தில் உள்ள 100 வறண்ட ஏரிகளுக்கு நீரேற்று மூலம் நீர் வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டு, சுமார் ரூ.565 கோடி மதிப்பிலான பணியை செயல்படுத்தும்வண்ணம் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது.

மேட்டூர் அணையின் முழு கொள்ளளவான 120 அடியை எட்டும் போது அணையின் இடது கரையின் நீர் பரப்பு பகுதியிலிருந்து வெள்ள உபரிநீரை கால்வாய் மூலம் திப்பம்பட்டி பிரதான நீரேற்று நிலையத்திற்கு கொண்டு செல்லப்படும். திப்பம்பட்டி பிரதான நிலையத்தில் ஒரு புறத்தில் 940 குதிரைத் திறன் கொண்ட 10 மின் மோட்டார்கள் மூலம் நீரேற்றம் செய்து 2.2 விட்டமுள்ள குழாயின் வழியாக விநாடிக்கு 126 கன அடி வீதம் 12 கி.மீ தூரத்தில் உள்ள எம்.காளிப்பட்டி ஏரிக்கு தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து 23 ஏரிகளில் தண்ணீர் நிரப்பப்படும்.

அதேபோல, வெள்ளாளபுரம் ஏரியில் அமைக்கப்படும் துணை நீரேற்று நிலையம் மூலம் மொத்தம் 640 குதிரைத் திறன் கொண்ட 4 மின் மோட்டார்கள் மூலம் 1.6 மீட்டர் விட்டமுள்ள குழாயின் வழியாக 5.50 கி.மீ தூரத்திலுள்ள வடுகப்பட்டி அருகே அமைக்கப்படும் கீழ்நிலை நீர்த் தொட்டிக்கு விநாடிக்கு 88 கன அடி வீதம் தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து 14 ஏரிகளில் நீர் நிரப்பப்படும். இத்திட்டத்தின் மூலம் சேலம் மாவட்டத்தில் 9 ஒன்றியங்களிலுள்ள 12 பொதுப்பணித் துறை ஏரிகள் மற்றும் 88 ஊராட்சி ஒன்றிய ஏரிகள் மற்றும் குட்டைகள் என மொத்தம் 100 ஏரிகளின் பாசனப் பரப்பான 4,238 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறும். அதுமட்டுமல்ல, அந்த ஏரிகளை நிரப்புகின்றபொழுது, இப்பகுதியிலுள்ள கிணறுகள், ஆழ்துளைக் கிணறுகள் ஆகியவற்றின் நிலத்தடி நீர் மட்டம் உயரும். இத்திட்டத்திற்கு தேவைப்படும் மொத்த நீரின் அளவான 555 மில்லியன் கன அடி நீரானது, விநாடிக்கு 214 கன அடி வீதம் 30 நாட்களுக்கு வழங்கும் வகையில் வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது. மேட்டூர் அணையானது 13.8.2019 முதல் 4.3.2020 வரை 205 நாட்கள், 100 அடிக்கு குறையாமல் நிரம்பியிருக்கிறது, இப்பொழுது 100

அடிக்கு மேல் தண்ணீர் இருக்கிறது. 2019 ஆம் ஆண்டு 4 முறை மேட்டூர் அணை அதன் அதிகபட்ச கொள்ளளவான 120 அடியை எட்டியுள்ளது. மேலும் 2019 ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் தொடர்ந்து 120 அடியிலேயே 42 நாட்கள் இருந்தது. ஆகவே, நமக்குத் தேவையான நீரை முழுமையாக கொண்டுவந்து நிரப்பி விடலாம். சென்ற ஆண்டு மொத்தமாக 79 நாட்கள் 120 அடி வரை தண்ணீர் இருந்தது.

இதில் பயன்பெறுகின்ற ஏரிகள் 100 ஏரிகள்.

| | |
|---|---|
| 1 | காளிப்பட்டி குட்டை |
| 2 | ராயப்பன் ஏரி |
| 3 | சின்ன ஏரி |
| 4 | மானாத்தாள் ஏரி |
| 5 | டி. மாரமங்கலம் ஏரி |
| 6 | பெரியேரிப்பட்டி ஏரி |
| 7 | மல்லிக்குட்டை ஏரி |
| 8 | அமரகுந்தி காத்தான் ஏரி |
| 9 | அமரகுந்தி புது ஏரி |
| 10 | கசுவாரெட்டிப்பட்டி ஏரி |
| 11 | செட்டி ஏரி |
| 12 | பெரிய காடம்பட்டி ஏரி |
| 13 | தாரமங்கலம் ஏரி |

14 சேடப்பட்டி குட்டை

15 ஆரூர்ப்பட்டி ஏரி

16 குறுக்குப்பட்டி

17 துட்டம்பட்டி

18 கொலந்தம்பட்டி ஏரி

19 வெள்ளாளபுரம் ஏரி

20 செங்குட்டை ஏரி

21 அரசன்குட்டை

22 ஈஜான் ஏரி

23 நாகசமுத்திரம் ஏரி

24 ஆவனிப்பேரூர் பெரிய ஏரி

25 ஏகாபுரம் ஏரி

26 சின்ன ஏரி

27 வழையசெட்டிபட்டி ஏரி

28 கஸ்பா ஏரி

29 பாப்பம்பட்டி புது ஏரி

30 கச்சுப்பள்ளி ஏரி

31 கோர்னம்பட்டி ஏரி

32 அய்யம்பாளையம் ஏரி

33 கொருக்குப்பட்டி ஏரி

| | |
|---|---|
| 34 | கொல்லப்பட்டி ஏரி |
| 35 | ராமகவுண்டன் குட்டை |
| 36 | கண்ணந்தேரி கஸ்பா ஏரி |
| 37 | கொங்கணாபுரம் புது ஏரி |
| 38 | பாவாய் குட்டை |
| 39 | செங்கன் குட்டை |
| 40 | எட்டிக்குட்டை |
| 41 | வண்ணான் குட்டை |
| 42 | மாங்குட்டப்பட்டி பெரிய ஏரி |
| 43 | மாங்குட்டப்பட்டி சின்ன ஏரி |
| 44 | பாளப்பட்டி குட்டை |
| 45 | நல்ல தண்ணீர் குட்டை |
| 46 | பஞ்சாங்க குட்டை |
| 47 | பெரிய ஏரி |
| 48 | மூலைவிட்டான் குட்டை |
| 49 | குட்டை |
| 50 | குன்டன் ஏரி |
| 51 | கட்சாரையா குட்டை |
| 52 | ஆடிகாட்டு குட்டை |
| 53 | பெரிய ஏரி |

54 குட்டை

55 குட்டை

56 ராகாஸ் குட்டை

57 பழனி கவுண்டன் குட்டை

58 ராஜா கவுண்டன் குட்டை

59 நொட்ட காரன் குட்டை

60 நல்ல தம்பி கவுண்டன் குட்டை

61 குப்பையா கவுண்டன் குட்டை

62 தொப்பம் குட்டை

63 காட்டன் குட்டை

64 வேப்பம் குட்டை

65 காளி கவுண்டன் குட்டை

66 அட்டகாரன் குட்டை

67 ஆச்சம்பள்ளி ஏரி

68 புங்க ஏரி

69 எடப்பாடி பெரிய ஏரி

70 எடப்பாடி சின்ன குட்டை

71 நங்கவள்ளி குட்டை / பிள்ளு குட்டை

72 வனவாசி ஏரி

73 கனக்கன் ஏரி

74 வாத்தியப்பட்டி ஏரி

75 வைரன் ஏரி

76 செலவடை ஏரி

77 ரங்கப்பன் ஏரி / கஞ்சப்பன் செட்டி ஏரி

78 குப்பம்பட்டி குட்டை

79 கோட்டமேடு வைத்தியர் குட்டை

80 ஜலகண்டாபுரம் ஏரி

81 காட்டம்பட்டி ஏரி

82 கட்டிநாய்கன் பட்டி ஏரி

83 இலவம்பட்டி ஏரி

84 பணங்கொட்டை ஏரி

85 அய்யன் ஏரி

86 அம்மாபாளையம் ஏரி

87 மேட்டுபூபட்டி ஏரி

88 கொட்டபுளிபாளையம் ஏரி

89 சர்க்கார் ஏரி

90 வேம்பனேரி

91 அம்மன் ஏரி

92 பொம்மசமுத்திரம் எரி

93 ஆவனிப் பேரூர் சின்ன ஏரி

94 குண்டியாம்பட்டி ஏரி

95 ஆச்சம்பட்டி ஏரி

96 மொன்னன்சேரி குட்டை

97 சித்தூர் ஏரி

98 ரெட்டிப்பட்டி ஏரி

99 பிள்ளுக்குறிச்சி ஏரி

100 குட்டை (Near East Bank Canal)

நான் குறிப்பிட்ட இந்த 100 ஏரிகளில் நீர் நிரப்புவதற்கு இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. ஒரு அரசாங்கம் எந்த அளவிற்கு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக குறிப்பிட்டேன். இந்த ஏரிப் பாசன பகுதிகளெல்லாம் அடுத்த வருடம் செழிப்போடும், உங்கள் முகமலர்ச்சியோடும் காணப்படும். வானம் பார்த்த பூமியாக இருப்பதையெல்லாம், செழிப்பான பூமியாக அரசு உருவாக்கித் தரும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், நஞ்சைப் புகழூர் கிராமத்தில் காவேரியாற்றின் குறுக்கே கதவணை கட்டும் திட்டத்திற்கான விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது, அந்தப் பணியும் விரைவாகத் தொடங்கவுள்ளது. எங்களுடைய கனவுத் திட்டமான காவேரி–கோதாவரி திட்டம் நிறைவேற்றப்படும் பொழுது, தமிழகத்திற்கு சுமார் 200 டிஎம்சி தண்ணீர் கிடைக்கும், அதற்கான முயற்சிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம். மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களும் இதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள். இந்தப் பணிகள் விரைவாக நிறைவு பெறும்.

தெலுங்கானா, ஆந்திரா, தமிழ்நாடு மூன்று மாநிலங்களும் இணைக்கப்பட்டு இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இதனால் டெல்டா மாவட்டங்கள் மட்டுமன்றி, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளும் நீர் ஆதாரம் பெறும். மேலும், இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும்பொழுது, காவிரிக்கரையின் இரு பகுதிகளிலும், 50 கிலோமீட்டர் தொலைவில் உள்ள வறண்ட ஏரிகள் அனைத்தும் நீரேற்றம் மூலம் தண்ணீர் கொண்டுவரப்பட்டு நிரப்பப்படும். நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப்போல், ரூபாய் 565 கோடி மதிப்பீட்டில் நீரேற்று பணியை துவக்கியிருக்கின்றோம். அதேபோல, இரண்டாம்கட்டமாக, வசிஷ்ட நதியில் தண்ணீர் கொண்டு வருவதற்கான திட்டம் அம்மா அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு ஆந்திர மாநில முதலமைச்சர் அவர்களிடம் காவேரி–கோதாவரி இணைப்பிற்கு பேச்சு வார்த்தை நடத்தவேண்டுமென்று நான் கடிதம் மூலமாக கேட்டிருந்தேன், அவரும் சம்மதித்துள்ளார். எனவே, முதற்கட்டமாக, இன்றையதினம் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் அவர்களை சந்தித்து என்னுடைய கடிதத்தை அவர்களிடம் வழங்கியிருக்கின்றார்கள். அதேபோல, மாண்புமிகு தெலுங்கானா முதலமைச்சர் அவர்களையும் சந்திப்பதற்கு நேரம் கேட்டுள்ளோம், அவர்களும் விரைந்து நேரம் வழங்குவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். எனவே, மூன்று முதலமைச்சர்களும் ஒன்றாக இணைந்து, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கண்ட கனவுத் திட்டமான இத்திட்டத்தை நிறைவேற்றுவது குறித்து ஆய்வு செய்து, அதனை மத்திய அரசிடம் சமர்ப்பித்து நிறைவேற்றுவோம். இத்திட்டத்தின்

மூலம் வரும் தண்ணீரை கரூர் கதவணையில் தேக்கி, அங்கிருந்து, கிட்டத்தட்ட 14 ஆயிரம் கோடி ரூபாயில் வெட்டப்படும் பிரதான கால்வாய்கள் மூலமாக திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர் போன்ற மாவட்டங்களைச் சேர்ந்த வறண்ட பகுதிகளில் உள்ள நிலங்களுக்கு நீர் வழங்கப்படும். இதனால், தென் மாவட்டங்கள் முழுவதும் செழிக்கும், இதுதான் எங்கள் இலட்சியம். அம்மா அவர்கள் எண்ணியதை நாங்கள் நனவாக்கிக் கொண்டிருக்கின்றோம். காவேரி–கோதாவரி இணைப்புத் திட்டம் சுமார் 64 ஆயிரம் கோடி ரூபாயில் நிறைவேற்றப்படும் என்று மத்திய அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார். மத்தியில் இணக்கமான உறவு இருக்கின்ற காரணத்தினால்தான் இன்று பல்வேறு பணிகள் சாத்தியமாக இருந்து கொண்டிருக்கிறது. நல்லது நடக்குமென்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். நிச்சயமாக, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆசியோடும், வேளாண் பெருமக்களின் ஆசியோடும் இந்தத் திட்டம் நிறைவேறும்.

அதுமட்டுமல்ல, 100 ஏரிகளில் பெரும்பாலான ஏரிகள் ஊராட்சி ஒன்றியத்திற்கும், சில ஏரிகள் பேரூராட்சி, நகராட்சி, பொதுப்பணித்துறைக்கும் உட்பட்டவையாக இருப்பதினால், இவற்றையெல்லாம் பொதுப்பணித் துறையின் கீழ் கொண்டு வந்தால் சிறப்பாக இருக்கும் என்று உள்ளாட்சிப் பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதையும் ஆய்வு செய்து கொண்டிருக்கின்றோம். இந்த 100 ஏரிகளிலும், நீர் நிரப்பப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், இந்த ஏரிகளை முழுமையாக சீரமைக்கத் தேவையான நிதியைக் கொடுப்பதற்கு அம்மாவின் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

எடப்பாடி தொகுதியைப் பொறுத்தவரை பல்வேறு திட்டங்களை நாங்கள் நிறைவேற்றியிருக்கின்றோம். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், நான் எடப்பாடி சட்டமன்ற வேட்பாளராக கழகத்தின் சார்பாக போட்டியிட்டபொழுது, பல்வேறு பிரச்சினைகளை மக்கள் என்னிடத்தில் சுட்டிக்காட்டினார்கள், கல்லூரி வேண்டுமென்று கேட்டார்கள். எனவே, ஏழை, எளிய மக்கள் நிறைந்த பகுதியில் குறைந்த கட்டணத்தில் மாணாக்கர் உயர்கல்வி படிக்க கல்லூரி வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று, 2011–ஆம் ஆண்டு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களிடத்தில் முதல் கோரிக்கையாக வைத்தேன். உடனே, அம்மா அவர்கள் ஒரு புதிய அரசுக் கலைக் கல்லூரியைக் கொடுத்தார்கள். சுமார் இரண்டாயிரம் மாணாக்கர் உயர்கல்வி பயில்கின்றனர். உங்கள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது. பாலிடெக்னிக் கல்லூரி வேண்டுமென்ற கோரிக்கைக்கு ஏற்ப, மேட்டூர், சங்ககிரி, எடப்பாடி தொகுதிகளுக்கு மத்தியில் நங்கவள்ளியில் ரூபாய் 58 கோடி மதிப்பீட்டில் பாலிடெக்னிக் கல்லூரி உருவாக்கி, ஆயிரக்கணக்கானவர்கள் பயிலக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கின்றோம். கொங்கணாபுரம் மக்களின் கோரிக்கையை ஏற்று, எட்டிக்குட்டைமேட்டில் பி.எட். கல்லூரி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், தொழில் சிறக்க, எட்டிக்குட்டைமேட்டில் சிட்கோ தொழிற்பேட்டை ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது, அது விரைவில் திறக்கப்படும். அதற்குத் தேவையான மின்சார வசதிக்காக துணை மின்நிலையம் ஒன்று அமைத்துக் கொடுத்திருக்கின்றோம். நங்கவள்ளி, எடப்பாடி, கொங்கணாபுரம் என மூன்று ஒன்றியங்களிலும் மாதிரிப் பள்ளிகள் வழங்கப்பட்டு, அக்கிராமங்களில் வாழ்கின்ற ஏழைக் குழந்தைகளும் ஆங்கிலக் கல்வி கற்கக்கூடிய சூழ்நிலையை நாங்கள் உருவாக்கித் தந்திருக்கின்றோம்.

பாதுகாக்கப்பட்ட காவிரி தண்ணீர் கிடைப்பதற்கு ரூபாய் **21** கோடி ரூபாயில் கூட்டுக் குடிநீர் திட்டத்தை அம்மா அவர்கள் நிறைவேற்றினார்கள். இப்பொழுது மேட்டூரில் **30** வார்டுகளுக்கும் பாதுகாக்கப்பட்ட தண்ணீர் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. எடப்பாடியில் ரூபாய் **4** கோடியில் கூடுதல் மருத்துவமனைக் கட்டடம் கட்டிக் கொடுத்துள்ளதோடு, சுமார் **4.5** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்கள் வாங்கிக் கொடுத்து சிறப்பான சிகிச்சை அளிக்கும் மருத்துவமனையாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறைக்கான கோட்ட அலுவலகம் உருவாக்கித் தந்துள்ளோம். எடப்பாடியில் மாவட்டக் கல்வி அலுவலகம் கொடுத்துள்ளோம். அம்மா அவர்கள் எடப்பாடி நகருக்கு புறவழிச் சாலை அமைக்கப்படும் என்று அறிவித்த, புறவழிச்சாலை திறக்கப்பட்டு மக்கள் எளிதாகச் சென்று வருகின்றனர். ஜலகண்டாபுரத்தில் புறவழிச் சாலை அமைக்க அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. தாரமங்கலத்தில் புறவழிச் சாலை அமைக்கப்பட்டு இன்றைக்கு திறக்கப்பட்டுள்ளது. தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றிய ஒரே அரசு எங்களுடைய அரசு என்பதை நிரூபித்துக் காட்டிக் கொண்டிருக்கின்றோம்.

எடப்பாடி—மகுடஞ்சாவடி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் எடப்பாடி, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி பகுதி மக்களுக்கு தங்குதடையில்லாமல் பாதுகாக்கப்பட்ட காவிரித் தண்ணீர் வழங்கப்படும் என்று தேர்தல் நேரத்தில் சொன்னதை இன்று செயல்வடிவாக்கியுள்ளோம். கூடுதலாக, விடுபட்டுள்ள கிராமங்களுக்கும் மேல்நிலைத்தொட்டி அமைத்து குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவித்த மேச்சேரி–நங்கவள்ளி கூட்டுக் குடிநீர் திட்டம் ரூபாய் 158 கோடி மதிப்பீட்டில் எங்கள் அரசால் நிறைவேற்றப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. கூடுதலாக, விடுபட்டுள்ள கிராமங்களுக்கும் மேல்நிலைத்தொட்டி அமைத்து தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முதலமைச்சரின் சிறப்புக் குறை தீர்க்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி, அதிகாரிகளே உங்களைச் சந்தித்து மனுக்களைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ள முதன்முதலில் எடப்பாடி சட்டமன்றத் தொகுதி, நங்கவள்ளியில் துவக்கினேன். இந்தத் திட்டம் சிறப்பானதென்று தமிழ்நாடு முழுவதும் மக்களிடம் வரவேற்பைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சேலம் மாவட்டத்தில் மட்டும் 58,218 மனுக்கள் பெறப்பட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு செய்து, தகுதியான மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. எடப்பாடியைப் பொறுத்தவரை, பெறப்பட்ட 4,154 மனுக்களில் 3616 மனுக்களுக்கு எங்களுடைய அரசால் தீர்வு காணப்பட்டு, 528 மனுக்கள் மறு பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. மனுக்கள் பெற்று மூன்றே மாதத்தில் குறைகள் தீர்க்கப்பட்டுள்ளனவென்றால், இந்த அரசு எந்தளவிற்கு நிர்வாகத் திறமைமிக்க அரசு என்பதை நிரூபித்திக் காட்டியுள்ளாம்.

சேலம் மாவட்டம் மட்டுமன்றி தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் பாலங்கள் கட்டிக் கொடுத்துள்ளோம், சாலைகள் அமைத்துக் கொடுத்துள்ளோம், சாலைகள் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. பேருந்து வசதிகள் செய்து கொடுத்துள்ளோம். சேலத்திலிருந்து பெங்களூரு, கோயம்புத்தூர் போன்ற நகரங்களுக்கு நேரடியாகச் செல்வதற்கு பேருந்து வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

சங்ககிரி, வீரபாண்டி சட்டமன்றத் தொகுதிகளுக்கு கூட்டுக் குடிநீர் திட்டம் விரைவாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும். நாமக்கல் மாவட்டத்திற்கும் காவேரியின் உபரி நீரை நீரேற்று மூலமாக கொண்டு சென்று ஏரிகளில் நீர் நிரப்பும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

அமெரிக்கன் படைப்புழு தாக்கி மக்காச்சோளப் பயிர் பாதிக்கப்படுவதைத் தடுக்க ரூபாய் **186.25** கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ள அரசு எங்களுடைய அரசு. இந்த ஆண்டு ரூபாய் **47.64** கோடி மதிப்பீட்டில் பூச்சிக்கொல்லி மருந்தை அரசே தெளித்ததன் விளைவாக விவசாயிகள் அதிக மக்காச்சோள மகசூல் பெற்றுள்ளனர். தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் **2962** கோடி ரூபாய் ஒதுக்கி, செயல்படுத்த அரசு முடிவெடுத்துக் கொண்டிருக்கிறது. **3746** பண்ணைக்குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. **966** தடுப்பணைகள் அமைக்கப்பட்டுள்ளன. பயிர்காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் **36.44** இலட்சம் விவசாயிகளுக்கு ரூபாய் **7,618** கோடி இழப்பீட்டுத் தொகை பெற்றுத் தந்து, இந்தியாவிலேயே விவசாயிகளுக்கு அதிகமான இழப்பீட்டுத் தொகை பெற்றுத்தந்த ஒரே அரசு எங்கள் அரசுதான். சுமார் **34** இலட்சம் விவசாயிகளுக்கு ரூபாய் **22** ஆயிரம் கோடி வட்டியில்லா பயிர்க்கடன் வழங்கப்படுகிறது. விவசாயிகளுக்கு ரூபாய் **304** கோடி வட்டி ஊக்கத் தொகை கொடுக்கப்படுகிறது. சொட்டுநீர் பாசனத் திட்டத்தில் தமிழகம் இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கின்றது, இதன்மூலம் ரூபாய் **1,582** கோடி மானியமாக வழங்கப்பட்டு சுமார் **3.25** இலட்சம் விவசாயிகள் இதன் மூலம் பயன் பெற்றுள்ளனர். உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ரூபாய் **681** கோடி நிதி ஒதுக்கப்பட்டு **8.81** இலட்சம் விவசாயிகள் பயன் பெற்றிருக்கிறார்கள். சிறு, குறு விவசாயிகளுக்காக, கடந்த

2 ஆண்டுகளில் கூட்டுப்பண்ணைத் திட்டம் மூலம் 20 ஆயிரம் குழுக்கள் அமைக்கப்பட்டு அதிலிருந்து 4,000 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டன. அரசு வழங்கிய மூலதன நிதியைப் பயன்படுத்தி 16 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பண்ணை இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன. விவசாயிகளின் பிரச்சினைகள் அனைத்தையும் தீர்க்க வேண்டுமென்ற அடிப்படையில் நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, தொடர்ந்து ஐந்தாண்டு காலம் உணவு தானிய உற்பத்தியில் தமிழ்நாடு தன்னிறைவு பெற்று, இந்தியாவிலேயே உணவு தானிய உற்பத்தியில் முதலிடம் வகிக்கின்ற மாநிலம் என்ற பெருமையைப் பெற்றுள்ளதோடு அதற்காக 5 முறை தேசிய விருதான “கிருஷி கர்மான்'' விருதை பெற்றுள்ளது என்பதை பெருமையோடு தெரிவிக்க விரும்புகின்றேன்.

''உழவன்” கைபேசி செயலி என்ற திட்டத்தின் மூலம் விவசாயிகள் கூட்டுறவு சங்கங்களில் விதை, உரம் இருப்பு, பூச்சிக்கொல்லி மருந்து, பயிர்க் காப்பீடு குறித்த தகவல்கள், விளைபொருட்களின் சந்தை விலை, வேளாண் இயந்திரங்களின் வாடகை மையங்கள், வானிலை, வேளாண் அலுவலர்களை தொடர்பு கொள்ளும் தொலைபேசி எண்கள் போன்றவற்றைத் தெரிந்து கொள்ளலாம். இவையெல்லாம் விவசாயப் பெருங்குடி மக்களின் நன்மைக்காக வழங்கப்பட்ட திட்டம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆத்தூர் அருகே தலைவாசல் கூட்டு ரோட்டில் பிரம்மாண்டமாக ரூ.1000 கோடி செலவில், 1866 ஏக்கர் பரப்பளவில் கால்நடை பூங்காவிற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அந்த கால்நடை பூங்காவில் நாட்டு இன காளைகள், நாட்டு இன பசுக்கள், ஆடுகள், கலப்பினப்

பசுக்கள் உருவாக்கப்பட்டு விவசாயிகளுக்குத் தரவிருக்கிறோம். ஆசியாவிலேயே மிகப் பெரிய கால்நடைப் பூங்கா அமைந்துள்ள மாநிலம் என்ற பெயரை பெறவிருக்கின்றது.

இந்தியாவிலேயே ஒரே வருடத்தில் 11 அரசு மருத்துவக் கல்லூரிகளை பெற்ற ஒரே அரசு அம்மாவினுடைய அரசு.

டெல்டா பாசன விவசாயிகளின் உரிமைக்குரலை நிலைநாட்டுவதற்காக, எங்களுடைய அரசு, டெல்டா பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்திருக்கின்றது. வேளாண் பெருமக்களுக்குத் தேவையான அனைத்து திட்டங்களையும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்து, வேளாண் பெருமக்கள், வேளாண் தொழிலாளர்கள் செழித்து வாழவேண்டும் என்பதே எங்களுடைய லட்சியம். கிராமப்புற பொருளாதாரம் செழிக்கின்றபொழுது நாடு செழிக்கும். ஆகவே, மகாத்மா காந்தியடிகள் கண்ட கனவு, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் கண்ட கனவு, இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா கண்ட கனவு எங்களுடைய அரசால் நனவாக்கப்படுகின்றது. இன்றைய தினம் அடிக்கல் நாட்டப்பட்டுள்ள இத்திட்டமானது இன்னும் 11 மாத காலத்திலே நிறைவேற்றப்பட்டு, மீண்டும் இந்தத் திட்டம் துவக்குகின்ற நிகழ்ச்சியும் விரைவிலே நடைபெறும் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்ற அத்தனை விவசாயப் பெருங்குடி மக்களும், விவசாயத் தொழிலாளர்களுக்கும், பொதுமக்களுக்கும், இந்த விழா சீரும் சிறப்புடன் நடைபெறுவதற்கு இரவு, பகல் பாராமல் பணியாற்றிய பொதுப்பணித் துறை அதிகாரிகளுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், அனைத்துத் துறை அதிகாரிகளுக்கும், இவ்விழாவிற்கு வருகை தந்து சிறபபித்த மாண்புமிகு அமைச்சர்

பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கூட்டுறவு சங்கப் பிரதிநிதிகள் மற்றும் அனைத்து விவசாயிகள் சங்க நிர்வாகிகளுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**